(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **21 UTM 613**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**ஆறாவது பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**சங்க இலக்கியம் - எட்டுத்தொகை**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. ‘நின்ற சொல்லர் நீடுதோறும் இனியர்’ – யார் கூற்று?

   (அ) செவிலி (ஆ) நற்றாய் (இ) பாங்கன் (ஈ) தலைவி

2. ‘சிறுதேர் உருட்டும் தளர் நடைகண்டு’ அன்பைப் பொழிந்தவர் யார்?

   (அ) தலைவி (ஆ) தோழி (இ) பரத்தை (ஈ) தலைவன்

3. ‘இமயத்தில் முன்னோர் மருள வணங்குவில்’ பொறித்தவன் ———

   (அ) சேரலாதன் (ஆ) நலங்கிள்ளி (இ) நெடுங்கிள்ளி (ஈ) தித்தன்

4. ‘பெரும்பல் யானைக்குட்டுவன்’ எனப் போற்றப்படுபவன் ———

   (அ) இமயவரம்பன் (ஆ) பல்யானைச் செல்கெழுகுட்டுவன்

   (இ) செங்குட்டுவன் (ஈ) பெருஞ் சோற்றுதியன்

5. ‘இருவர்தாதை….’ யார்?

   (அ) சிவன் (ஆ) மால் (இ) முருகன் (ஈ) பிரம்மன்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** **(K2)**

6. தலைவி தன் காதலனோடு கொண்டிருந்த நட்பைத் தேவகுலத்தார் எங்ஙனம் சிறப்பித்துள்ளார்?
7. ஏறு தழுவச் சென்றோர் எவற்றை வழிபட்டுச் சென்றனர்?
8. உண்டியின் சிறப்பைக் குடபுலவியனார் எங்ஙனம் போற்றுகிறார்?
9. ‘ஓடாப்பூட்கை’ என்றால் என்ன?
10. முருகனின் திருவடிகளை அடையக்கூடியோர் யார்?

ம்

(த.பி.பா.)

**பகுதி – ஆ (5 x 4 = 20)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) மாமூலனாரின் நற்றிணைப்பாடல் தலைவன் பொருள் தேடச் சென்ற வழியினருமையை எங்ஙனம் விவரிக்கின்றது?

(அல்லது)

ஆ) தலைவி, உறங்காதிருந்ததைப் பதுமனார் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

12. அ) சுரத்தருமை கூறி உடன் செலவு மறுக்கும் தலைவனிடம் தோழி உரைத்தது யாது?

(அல்லது)

ஆ) அறமல்லாதனவற்றைச் செய்தால் என்ன நிகழுமெனக் கபிலர் தோழியின் வயிலாக அறிவுறுத்துகிறார்?

13. அ) கரிகால் பெருவளத்தானின் வாகைப் பறந்தலை வெற்றியைப் பரணர் எதற்கு உவமையாக்கிப் பாடியுள்ளார்?

(அல்லது)

ஆ) பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி பரிசிலர்க்கு இனியன செய்தலை நெட்டிமையார் எங்ஙனம் சிறப்பித்துள்ளார்?

14. அ) 'வாழ்கநின்வளனே' எனப் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாராட்டடப்படுவதன் பின்னணியை விளக்குக.

(அல்லது)

ஆ) பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மனைவி எங்ஙனம் போற்றப்படுகின்றாள்?

15. அ) புதுப்புனலாட முற்படும் மகளிரின் செயல்களைப் பரிபாடல் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

(அல்லது)

ஆ) மதுரை மாநகரத்தின் சிறப்பைப் பரிபாடல் எவ்வாறு உணர்த்துகின்றது?

**பகுதி – இ (4 x 10 = 40)**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.**

**வினாஎண்.16க்குக் கண்டிப்பாகவிடையளிக்கவும். (K4& K5)**

16. தலைவனின் செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லியவற்றைக் கட்டுரைக்க.
17. ஐங்குறுநூற்றின் முல்லைத்திணையில் செவிலிக் கூற்றுப் பத்து விவரிக்கும் செய்திகளை நும் பாடப்பகுதி வழி விவரித்தெழுதுக.
18. நீர்நிலைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைக் குடபுலவியனார் பாடலைக் கொண்டு விவரிக்க.
19. பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் நாடு காத்தற் சிறப்பைப் பற்றிக் கட்டுரை வரைக.
20. வையையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயல்களைத் தொகுத்துரைக்க.
21. தோழி தலைமகளின் கற்புடைமையைத் தலைமகனுக்குக் கூறும் பாங்கினைப் பரிபாடல் வழி எடுத்தியம்புக.

*ETHICAL PAPER*

********